# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE, KODAVASAL

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.T.C. No. 248/2025** |
| Prosecution witness | : | P.W. 1 |
| List of witness | : | L.W. 1 |
| Name | : | **குருசீலன்** |
| Father's /Husband Name | : | **குமார்** |
| Village | : | **வலைங்கமான்** |
| Taluk | : | **வலைங்கமான் காவல் நிலையம்** |
| Age | : | 34 |
| Occupation | : | **இரண்டாம் நிலைக் காவலர்** |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873, 21st day of May 2026. Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது வலைங்கமான் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 10.11.2024 ம் தேதி நான் குடவாசல் காவல் நிலையத்தில் இரண்டாம் நிலைக் காவலராக பணிபுரிந்த போது காலை 08.30 மணியளவில் நான் நிலையத்திலிருந்த போது உதவி ஆய்வாளர் திரு. கோபிநாத் என்பவர்க்கு கிடைத்த ரகசிய தகவலின் படி இராதாநல்லூர் பஸ் ஸ்டாப் அருகே அருண்குமார் என்பவர் கஞ்சா விற்பனை செய்வதாக கிடைக்கப்பெற்ற தகவலைப் பெற்று மேற்படி உதவி ஆய்வாளர் பொது நாட்குறிப்பில் பதிவு செய்தும் நன்னிலம் உட்கோட்ட காவல் துணை கண்காணிப்பாளர் அவர்களுக்கு தகவல் தெரிவித்து கொண்டு மேற்படி உதவி ஆய்வாளருடன் நானும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி ஆகியோர்கள் இராதாநல்லூர் பஸ் ஸ்டாப் அருகே கண்காணித்த போது அங்கு நின்று கொண்டிருந்த நபரை மேற்படி உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவர் தனது பெயர் ராமதாஸ் மகன் அருண்குமார் என்று கூறினார். **(சாட்சி ஆஜர் எதிரியை அடையாளம் காண்பித்தார்)**

பின்னர் அந்த நபரிடம் மேற்படி உதவி ஆய்வாளர் தாங்கள் கஞ்சா விற்பனை செய்து வருவதாக தகவல் கிடைத்திருப்பதாகவும் சோதனை செய்வதற்கு அருகில் உள்ள நீதிபதியிடமோ அல்லது அரசு பதிவு பெற்ற அலுவலரிடமோ அழைத்துசென்று சோதனை செய்ய வேண்டுமென எழுத்து மூலமாக அறிவிப்பு கொடுத்து அந்த நபர் என்னை போலீசாராகிய நீங்களே சோதனைசெய்துகொள்ளலாம் என்று எழுத்து மூலமாக சம்மத கடிதம் மூலம் அவரது சம்மதத்தை மேற்படி உதவி ஆய்வாளரிடம் தெரிவித்தார்.

எங்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர் அருண்குமாரை சோதனை செய்த போது அவரது இடுப்பில் பாலிதீன் பேப்பரில் சுற்றி மறைத்து வைத்திருந்த பொட்டலங்களை எடுத்து பிரித்து பார்த்தபோது அதில் கஞ்சா இருந்தது. அதைப்பற்றி உதவி ஆய்வாளர் விசாரித்தபோது அவரிடம் அரசு அனுமதியோ உரிமமோ இல்லை என்று கூறினார்.

பின்னர் உதவி ஆய்வாளர் 09.15 மணியளவில் குற்ற காரணம் கூறி கைது செய்து அவரது உறவினருக்கு தகவல் தெரிவித்தார். நாங்கள் எடுத்து சென்ற கை தராசில் எடைப்போட்ட போது மொத்தம் 150 கிராம் அளவு கஞ்சா இருந்தது. உதவி ஆய்வாளர் தலா 25 கிராம் எடை உள்ள கஞ்சாவை இரண்டு பொட்டலாங்களாக ஆய்வுக்கு எடுத்து சீல் வைத்து மீதமுள்ள 100 கிராம் கஞ்சாவை சீல் வைத்து 09.30 மணியளவில் என் முன்னிலையிலும் சிறப்பு உதவி ஆய்வாளர் திரு.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையிலும் கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றினார். தனிநபர் சாட்சிகள் யாரும் அங்கு முன் வரவில்லை. கைப்பற்றுதல் மகசரில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையதுதான். **(கைப்பற்றுதல் மகசர் அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** பின்னர் எதிரி மற்றும் தடயப்பொருட்களுடன் நிலையம் வந்து நிலைய குற்ற எண் 435/2024 சட்டப்பிரிவுகள் 8(c), 20(b)(ii)(A) NDPS Act ன் கீழ் உதவி ஆய்வாளர் வழக்கு பதிவு செய்ய நாங்கள் உதவியாக இருந்தோம். உதவி ஆய்வாளர் என்னை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர், உதவி ஆய்வாளர் திரு.சந்திரசேகரன் என்னை விசாரித்தார்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>** :-

நான் சொன்ன நாள் சொன்ன நேரம் சொன்ன இடத்தில் உதவி ஆய்வாளர் ரோந்து பணிக்கு செல்லவில்லை என்றால் சரியல்ல. எதிரியை கைது செய்ததாக சொல்லப்படும் இடம் மக்கள் நடமாட்டம்அதிகம் உள்ள இடம் என்றால் சரிதான். நான் சொல்வது போல் உதவி ஆய்வாளர் தடயப்பொருட்களை கைப்பற்றவில்லை என்றாலும் புள்ளிவிவரத்திற்காக எதிரிமீது பொய்யாக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றாலும் எதிரியை சொன்ன நாள் சொன்ன இடத்தில் கைது செய்யவில்லை என்றாலும் எதிரிக்கும் இவ்வழக்கிற்கும் எந்த தொடர்பும் இல்லை என்றாலும் சரியல்ல.

**<u>மறு விசாரணை</u>**

இல்லை.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.05.21 12:42:35 +0530

District Munsif -Cum-
Judicial Magistrate,
Kodavasal.

`